## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை,

## கிருஷ்ணகிரி மாவட்டம்.

அசல் வழக்கு எண்.50/2013 நாள்: 06.01.2021

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதி தரப்பில் வா.சா1 சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர், நீதிமன்றத்தில் திரு.மாதையன், பென்ஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

பெயர் : ரமேஷ்

தந்தை பெயர் : அண்ணாமலை

கிராமம் : தாலுக்கா :

வயது : வேலை :

**4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:**

எனது தாத்தா ராமசாமி (எ) குப்ப போயன் யார் யாருக்கு எவ்வளவு நிலம் விற்பனை செய்தார் என்றால் எனது உயிலில் உள்ள சொத்துக்களை பொறுத்துதான் எனக்கு தெரியும். இந்த வழக்கின் 1,2,3 பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு என்றால் 3-ஆம் பிரதிவாதி எனது தந்தை, 1, 2 பிரதிவாதிகள் அண்ணன்கள் ஆவார். 3-ஆம் பிரதிவாதி அண்ணாமலை யாருக்கு எவ்வளவு சொத்துக்களை கிரையம் கொடுத்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் என் தந்தை பெயரில் சொத்துக்களே இல்லை, அவர் யாருக்கும் கிரையம் கொடுக்கவுமில்லை. என் முன்பு காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணமானது 1993 ஆம் வருடத்தில் எனது தாத்தா 4-ஆம் பிரதிவாதிக்கு சர்வே எண்.21/2ஏ-ல் 80 சென்ட் நிலத்தை கிரையம் ஏற்படுத்திக்கொடுத்ததற்கான கிரைய ஆவணம் என்றால் சரிதான். என் முன்பு காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணமானது 12.07.1996 அன்று எனது தாத்தா 4-ஆம் பிரதிவாதிக்கு சர்வே எண்.21/2ஏ-ல் 36 சென்ட் நிலத்தை கிரையம் ஏற்படுத்திக்கொடுத்ததற்கான கிரைய ஆவணம் என்றால் சரிதான். என் முன்பு காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணமானது 06.05.1996-அன்று எனது தகப்பனார் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் சேர்ந்து என்னை மைனராக குறிப்பிட்டு 4-ஆம் பிரதிவாதி பெயரில் சர்வே எண்.21/2ஏ சொத்தில் 4 சென்ட் மட்டும் கிரையம் கொடுத்ததற்கான கிரைய ஆவணம் என்றால் சரிதான். என் முன்பு காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணமானது 4-ஆம் பிரதிவாதி மற்றும் வரதப்பன் ஆகியோர்கள் பெயர்களின் ஏற்பட்ட கணிணி சிட்டா என்றால் சரிதான். எனது தாத்தா பெயரில் வேறு இடங்களில் வேறு சர்வே எண்களில் ஏதாவது சொத்துக்கள் உள்ளதா என்றால் சொத்துக்கள் இல்லை. இந்த வழக்கினை பொறுத்து நான் 1, 2 பிரதிவாதிகளிடம்தான் பரிகாரம் கோர இயலும் என்றாலும், 4 முதல் 8 பிரதிவாதிகளிடம் எந்த பரிகாரமும் கோர நான்

உரிமை படைத்தவர் அல்ல என்றாலும் சரியல்ல. இந்த வழக்கினை நான் தாக்கல் செய்த போது சொத்து விவரமே சரியாக குறிப்பிடாமல், பின்னிட்டு திருத்தப்பாடு மனு மூலமாக திருத்தம் செய்திருப்பதால் எனக்கு வழக்கின் சொத்து விவரமே சரியாக தெரியாது என்றால் சரியல்ல. எனது தாத்தா என் பெயரில் உயில் எழுதிவைத்திருப்பதாக எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 2013 ஆம் ஆண்டில் தான் தெரிய வந்தது. எனது தாத்தா 4-ஆம் பிரதிவாதிக்கு கிரையம் ஏற்படுத்திக்கொடுத்த விவரங்கள் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் அதுவும் 2013 ஆம் ஆண்டில் தான் தெரிய வந்தது. 4-ஆம் பிரதிவாதி பெயரில் எற்படுத்தப்பட்ட கிரைய பத்திரங்கள் மற்றும் வருவாய் துறை ஆவணங்களை நான் ரத்து செய்திட சார் பதிவாளர் அலுவலகத்திலோ, வருவாய் துறை அலுவலகத்திலோ நான் ஏதாவது மனு அளித்திருந்தேனா என்றால் மனு அளிக்கவில்லை. கொண்டம்பட்டி கிராமத்தின்அருகிலுள்ள கொல்லானூர் கிராமத்தில் எனது தாத்தாவிற்கு சொத்துக்கள் இருந்ததா என்றால் சொத்துக்கள் இருந்தது, அந்த சொத்துக்களை இந்த வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த சொத்துக்களின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியும், சர்வே எண்.21/2ஏ ஆகும். எனது வழக்குரையில் வேண்டியிருப்பதுபோல எந்த பரிகாரமும் 4 முதல் 8 பிரதிவாதிகளிடம் கோரமுடியாது என்றாலும், 1 முதல் 3 பிரதிவாதிகளிடம்தான் கோரமுடியும் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தினை தற்போதும் 4-ஆம் பிரதிவாதிதான் அனுபவம் செய்து வருகிறார் என்றாலும், வழக்கு சொத்தினை பொறுத்து எந்த ஆவணமும் என் பெயரில் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. இந்த வழக்கானது 4-ஆம் பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பாக தக்கது என்றாலும், எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும், அவை யாவும் எனது வழக்கிற்கு தொடர்புடையவை அல்ல என்று சொன்னாலும் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள கூடுதல் பிரமாண பத்திரத்தில் 9-வது பத்தியில் வழக்கு தள்ளபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்று என குறிப்பிடபட்டிருப்பதால் என்னுடைய வழக்கு தள்ளபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை பெயரில் நிலம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கை தவிர்த்து எனது தாத்தா பெயரில் உள்ள சொத்து என குறிப்பிட்டு வேறு வழக்கு ஏதாவது நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கினை தாக்கல் செய்வதற்கு எனக்கு எந்தவிதமான மூகாந்திரம் இல்லை என்றாலும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னாலும் சரியல்ல. இந்த வழக்கானது முழுமையாக தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்துக்களுக்கு எனது தாத்தா பெயரில் வரி செலுத்தியதற்கான வரி ரசீதுகள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாத்தா பெயரில் உள்ள வருவாய் துறை ஆவணங்கள் ஏதாவது இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கானது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவுற்றது.